மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.221/2018</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி 25ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வீரக்குமார் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>25.02.2026 வா.சா.3 சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை</u>

நான் சின்னதாராபுரம் குறு வட்ட வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அரவக்குறிச்சி வட்டாட்சியர் அவர்கள் அனுமதி கடிதம் வழங்கி உள்ளார். இந்நீதிமன்றத்தின் அழைப்பாணையில் கண்டுள்ள 25.09.2015 தேதியிட்ட அதிமு/34/2016 சின்ன தாராபுரம் வருவாய் ஆய்வாளர் அறிக்கை மற்றும் 18.08.2016 தேதியிட்ட ஓ.மு ( அ2) 6393/2015 அரவக்குறிச்சி வட்டாட்சியர் அறிவிப்பு ஆகிய கோப்புகள் எங்கள் அலுவலக பதிவறையில் தேடிப்பார்த்ததில் மேற்படி ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை. மேற்படி ஆவணங்கள் ஓர் ஆண்டு கழித்து அழிக்கப்பட்டுவிடும். வட்டாட்சியர் வழங்கிய அனுமதி கடிதம் சா.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது. அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்கள் இல்லை என்பதை பொறுத்து வட்டாட்சியர் வழங்கிய கடிதம் சா.சா.ஆ.2 ஆக குறியிடு செய்யப்படுகிறது.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.25 18:47:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.